இதே கேள்வியைக் கேட்டு, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் அதைக் கவனிக்காமல் மீண்டும் அதே கேள்வியைக் கேட்க வேண்டாம். (குறுக்கீடு) உட்காருங்கள்.

வினா வரிசை எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**172—**

**பால் குளிரூட்டும் நிலையம்**

*5328—**திரு. கே.பி. பரமசிவம்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பொங்கலூர், பல்லடம் ஆகிய பகுதிகளில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல்லடம் தொகுதியில், பல்லடம், பொங்கலூருக்கு அருகில் உள்ள சுல்தான்பேட்டையில், நாள் ஒன்றுக்கு 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆனால், தற்போது நாள் ஒன்றுக்கு 30,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. பொங்கலூர் பகுதியில் நடுவேலன்பாளையத்தில், நாள் ஒன்றுக்கு 2,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிர்விப்பு நிலையம், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணைப்படி நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது.

மேலும், பல்லடம் தொகுதியில், நாள் ஒன்றுக்கு 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு பால் குளிர்விப்பான் மையங்கள்

2012 ஏப்ரல் 26]

கே. அய்யம்பாளையம் மற்றும் வி. கள்ளிப்பாளையம் ஆகிய இடங்களில் நிறுவ மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் அடிப்படையில், பல்லடம் மற்றும் பொங்கலூர் பகுதிகளில் பால் உற்பத்தி அதிகரித்து, தேவை ஏற்படும்போது பரிசீலனை செய்யப்பட்டு, பால் குளிர்விப்பான்கள் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.*

**திரு. கே.பி. பரமசிவம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாகத் தமிழகத்தின் தலைசிறந்த முதலமைச்சராகவும், ஒன்றரை கோடி தொண்டர்களின் உயிர் மூச்சாகவும், 7 கோடி தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், இந்திய அரசியலை நிர்ணயிக்கின்ற தலைசிறந்த முதலமைச்சராகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதம் தொட்டு வணங்குகின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் தொகுதி என்பது, திருப்பூர் மாவட்டம் பிரிக்கப்பட்ட பிறகு அமைந்த புதிய தொகுதியாகும். திருப்பூர் மாவட்டத்தினுடைய மையப் பகுதியிலே பல்லடம் அமைந்துள்ளது. அங்கே புதியதாக மாவட்டத் தலைமை அலுவலகங்களை ஏற்படுத்த வேண்டியிருக்கின்றது. இந்த நிலையில், பல்லடம் தொகுதியில் அதிகப்படியான அளவில் பால் உற்பத்தியாகின்றது. திருப்பூர் மாவட்டத்தின் மையப் பகுதியிலே அமைந்துள்ள பல்லடம் தொகுதியில், மாவட்டத்தினுடைய தலைமை அலுவலகத்தையும், பால் குளிரூட்டும் நிலையத்தினையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று அமைத்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. வி. மூர்த்தி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல, பல்லடம் தொகுதியில், அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய இடத்தில் பால் வரத்து அதிகமாக இருக்குமேயானால், அங்கே நம்முடைய ஆவின் நிறுவனத்தின் சார்பில் ஆய்வு செய்து, பரிசீலனை செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டு சென்று, அங்கே அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

**173—**

## கட்டட வசதி

***5036—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

*மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி தொகுதி, அக்ராபாளையம் ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆரணி தொகுதி, அக்ராபாளையம் ஊராட்சியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்று கேட்டிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே, கடந்த 2011–2012 ஆம் நிதியாண்டிலே, 122 கோடி ரூபாய் அளவிற்கு நபார்டு வங்கித் திட்டத்தின்கீழ் பெற்ற நிதியிலேயிருந்து, 26.66 இலட்சம் ரூபாய் அந்த மருத்துவமனைக்கு ஒதுக்கப்பட்டு, தற்போது அங்கே அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தக் கட்டடப் பணி தற்போது* lintel *வரை முடிந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அது தெரியுமா, தெரியாதா என்பது எனக்குத் தெரியவில்லை.*